www.Padasalai.Net www.TrbTnpsc.com

SIVANANDHA K M.A., B.Ed.
GHS SANDHANAPALLI
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

QL

# காலாண்டுத் தேர்வு – 2024

**8 – ஆம் வகுப்பு** **சமூக அறிவியல்**

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **14 x 1 = 14**

1. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் __________ நாட்டைச் சேர்ந்தவர்.
(அ) போர்ச்சுக்கல் (ஆ) ஸ்பெயின் (இ) இங்கிலாந்து (ஈ) பிரான்ஸ்

2. துணைப்படைத் திட்டத்தில் இணைத்துக் கொண்ட முதல் இந்திய சுதேச அரசு எது?
(அ) அயோத்தி (ஆ) ஹைதராபாத் (இ) உதய்பூர் (ஈ) குவாலியர்

3. பர்தோலி சத்தியாகிரகம் யார் தலைமையில் நடத்தப்பட்டது?
(அ) சர்தார் வல்லபாய் பட்டேல் (ஆ) மகாத்மா காந்தியடிகள் (இ) திகம்பர் பிஸ்வாஸ் (ஈ) கேசப் சந்திர ராய்

4. பாளையக்காரர் முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு ______. (அ) 1519 (ஆ) 1520 (இ) 1529 (ஈ) 1530

5. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.
(அ) கட்டபொம்மன் (ஆ) ஊமைத்துரை (இ) செவத்தையா (ஈ) திப்பு சுல்தான்

6. கீழ்க்கண்டவற்றில் எவ்வகை மண் பரவலாகவும் அதிக வளமுள்ளதாகவும் உள்ளது?
(அ) வண்டல் மண் (ஆ) கரிசல் மண் (இ) செம்மண் (ஈ) மலை மண்

7. புவி பெரும் ஆற்றல் ________. (அ) நீரோட்டம் (ஆ) மின்காந்த அலைகள் (இ) அலைகள் (ஈ) வெப்பம்

8. நீர் கடலிலிருந்து, வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து நிலத்திற்கும், மீண்டும் நிலத்திலிருந்து கடலுக்குச் செல்லும் முறைக்கு __________ என்று பெயர்.
(அ) ஆற்றின் சுழற்சி (ஆ) நீரின் சுழற்சி (இ) பாறைச் சுழற்சி (ஈ) வாழ்க்கைச் சுழற்சி

9. வளம் மிகுந்த வேளாண்மை நிலம் தேடி இடம் பெயர்தல் நடைபெறுவது __________.
(அ) கிராமத்தில் இருந்து கிராமத்திற்கு (ஆ) கிராமத்தில் இருந்து நகரத்திற்கு
(இ) நகரத்தில் இருந்து கிராமத்திற்கு (ஈ) நகரத்தில் இருந்து நகரத்திற்கு

10. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?
(அ) குடியரசுத் தலைவர் (ஆ) துணைக் குடியரசுத் தலைவர் (இ) பிரதமர் (ஈ) முதலமைச்சர்

11. சரியான கூற்றைத் தேர்ந்தெடு
மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்கண்டவர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு பெறுகின்றனர்.
(i) குடியரசுத் தலைவர் (ii) துணைக் குடியரசுத் தலைவர்
(iii) மாநிலங்களவை உறுப்பினர்கள் (iv) சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள்
(அ) i, ii மற்றும் iii சரி (ஆ) i மற்றும் iii சரி (இ) i, iii மற்றும் iv சரி (ஈ) i, ii, iii மற்றும் iv சரி

12. கூற்று : 1962 ஆம் ஆண்டு பாண்டிச்சேரி இந்திய யூனியனுடன் இணைந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் இந்திய குடிமக்களாயினர்.
காரணம் : 1955 இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் படி பிரதேசங்களை இணைத்தல் என்பதன் அடிப்படையில் அவர்கள் இந்திய குடிமக்களாயினர்.
(அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் (ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
(இ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி (ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

13. சமயச் சுதந்திர உரிமை எதனுடன் தொடர்புடையது.
(அ) நீதித்துறை (ஆ) பாராளுமன்றம் (இ) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கை (ஈ) அடிப்படை உரிமைகள்

14. 'எதையெல்லாம் செய்யவல்லதோ, அதுவே பணம்' என்று கூறியவர்.
(அ) சர் ஜான் ஹிக்ஸ் (ஆ) வாக்கர் (இ) ஸ்டோவ்ஸ்கி (ஈ) இராபர்ட்சன்

**II பொருத்துக.** **6 x 1 = 6**

15.

| | | |
|---|---|---|
| (i) புனித லூயிஸ் கோட்டை | – | புவியின் மேற்பரப்பு |
| (ii) இரயத்துவாரி முறை | – | தெய்வீக நம்பிக்கை |
| (iii) நீர் ஊடுருவுதல் | – | பாண்டிச்சேரி |
| (iv) விதவைகள் மறுமணச் சட்டம் | – | வரி ஏமாற்றுபவர்கள் |
| (v) தீன் – இலாஹி | – | மதராஸ் |
| (vi) கருப்பு பணம் | – | 1856 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

III கோடிட்ட இடங்களை நிரப்புக. 5 x 1 = 5

16. அலிநகர் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு ________.
17. ________ 'சிவகங்கையின் சிங்கம்' என அழைக்கப்படுகிறார்.
18. வளிமண்டலத்தில் இருந்து புவியை நோக்கி விழும் எல்லா வகையான நீருக்கும் ______ என்று பெயர்.
19. இந்திய அரசியலமைப்புச் சட்டம் ________ குடியுரிமையை மட்டும் வழங்குகிறது.
20. நிகழ்நிலை வங்கியை ________ என்றும் அழைக்கலாம்.

IV சரியா / தவறா எனக் குறிப்பிடுக. 5 x 1 = 5

21. ஆனந்தரங்கம், பிரிட்டிஷ் மொழிபெயர்ப்பாளராக இருந்தார்.
22. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஐந்தாண்டு நிலவரி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
23. புவியைச் சுற்றியுள்ள வளிமண்டலம் பல்வேறு வாயுக்களால் ஆன கலவையாகும்.
24. குடிசைப் பகுதிகள் பொதுவாக பெருநகரங்களில் காணப்படுகிறது.
25. ஆளுநர் சட்டமன்றத்திற்கு இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களை நியமிக்கிறார்.

V வேறுபடுத்துக. 5 x 2 = 10

26. உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப் பாறைகள்
27. மண்வளப் பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு
28. காலநிலை மற்றும் வானிலை
29. முழுமையான ஈரப்பதம் மற்றும் ஒப்பு ஈரப்பதம்
30. கோள் காற்றுகள் மற்றும் பருவகாலக் காற்றுகள்

VI காரணம் கூறுக. 5 x 1 = 5

31. நீர்த்தேக்கப் படுகைகளில் இரசாயன படிவுப் பாறைகள் காணப்படுகின்றன.
32. உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது.
33. மலை ஏறுபவர்கள் உயர்ந்த சிகரங்களுக்குச் செல்லும் போது ஆக்ஸிஜன் சிலிண்டர்களை எடுத்துச் செல்கின்றனர்.
34. நீர் புகாத இடங்களில் நீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது.
35. புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.

VII சுருக்கமாக விடையளி (எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி). 10 X 2 = 20

36. நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.
37. பக்சார் போருக்கான காரணங்களை குறிப்பிடுக.
38. மகல்வாரி முறையின் விளைவுகளைக் கூறுக.
39. பாளையக்கார புரட்சியில் வேலுநாச்சியாரின் பங்கு என்ன ?
40. தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன ?
41. 'வளிமண்டலக் காற்றழுத்தம்' என்றால் என்ன ?
42. நீர்கொள் பரப்பு பற்றி குறிப்பு வரைக.
43. 'இடம் பெயர்தல்' – வரையறு.
44. முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார் ?
45. ஓர் இந்தியக் குடிமகன் நமது நாட்டில் அனுபவிக்கும் உரிமைகள் யாவை ?
46. சமயச் சார்பின்மையைப் பரப்பிட பங்களித்த சில இந்தியர்களது பெயர்களைக் குறிப்பிடுக.
47. அண்மை கால பணத்தின் வடிவங்கள் யாவை ?

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

VIII விரிவான விடையளி. 4 x 5 = 20

48. பிரிட்டிஷ் ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசி பிரபு கொண்டு வந்த கொள்கையை பற்றி விவரி. (அல்லது)
பூலித்தேவரைப் பற்றி நீவிர் அறிந்ததை எழுதுக.
49. மண் உருவாக்கச் செயல்முறைகள் பற்றி விவரி. (அல்லது)
நகரமயமாக்கலினால் ஏற்படும் சவால்களை ஆராய்க.
50. ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது ? (அல்லது)
சமயச்சார்பற்ற கல்வி நமக்கு ஏன் தேவை ?
51. பணத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி எழுதுக. (அல்லது) வங்கி வைப்புகளின் வகைகளை விவரி.

IX கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் (India outline map) குறிக்கவும். 10 x 1 = 10

(i) தில்லி (ii) ஜான்சி (iii) சம்பரான் (iv) பாரக்பூர் (v) பம்பாய் (vi) கள்ளிக்கோட்டை
(vii) பழவேற்காடு (viii) பாண்டிச்சேரி (ix) தரங்கம்பாடி (x) இந்தியப் பெருங்கடல்

X கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும். 5 x 1 = 5

(i) இந்தியா (ii) ஐரோப்பா (iii) அட்லாண்டிக் பெருங்கடல் (iv) ஆர்டிக் வட்டம் (v) வெப்ப மண்டலம்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com